# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

9- வகுப்பு தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

பகுதி - I

I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8X1=8

1. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.
   அ) கலைக்கூடம், திரையரங்கம், ஆடுகளம், அருங்காட்சியகம் ஆ) கடி, உறு, கூர், கழி
   இ) வினவினான், செப்பினான், உரைத்தான், பகன்றான் ஈ) இன்,கூட,கிறு, அம்பு
2. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
   இ) வினையெச்சம். உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
3. பல்லவர் காலச் சிற்பங்களுக்குச் சிறந்த சான்று
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார் பட்டி இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு
4. 'பொதுவர்கள் பொலி உறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி
   அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை
5. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை
   அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
   இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்
6. 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?
   அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள் ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
   இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள் ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

Padasalai.net@gmail.com

பாடலைப் படித்து விடை தருக.

இருபெரு விசும்பிற் செல்லும்
இளமைதீர் மதியம் தன்னைக்
கருமுகில் தொடர்ந்து செல்லுங்
காட்சி போலதோன்று மாதோ

7. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்?
   அ) குடும்ப விளக்கு ஆ) இராவண காவியம் இ) சிறுபஞ்சமூலம் ஈ) இருண்ட வீடு
8. கருமுகில் - இலக்கணக் குறிப்பு தருக.
   அ) பண்புத் தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) வேற்றுமைத் தொகை

II. எவையேனும் ஆறனுக்கு விடை தருக. (16 கட்டாய வினா). 6X2=12

9. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:
   அ) பெண் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி அதற்காகப் போராடிய வீரச்சிறுமி மலாலா.
   ஆ) சோழர்காலம் செப்புத்திருமேனிகளின் 'பொற்காலம்' என்று அழைக்கப்படும்.
10. மூவாது மூத்தவர், நூல் வல்லார் -இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.
11. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
12. நடுகல் என்றால் என்ன?
13. இசைத்தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?
14. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

15. கலைச்சொல் தருக. 1. Social Reformer - ………… 2.Cave Temple …………

16. பொருத்தமான உரிச் சொற்களை எழுதுக.

அ) ……………. பெரும் பொதுக்கூட்டம் (கடி, மா)

ஆ) ……………. சிறந்தது (சால, மழ)

III. எவையேனும் நான்கனுக்கு விடை தருக. (17 கட்டாய வினா) 4X3=12

17. அடிபிறழாமல் எழுதுக.

'பூவாது காய்க்கும்' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடல் *(அல்லது)*

'கல்லிடைப் பிறந்த' எனத் தொடங்கும் இராவண காவியப் பாடல்

18. சமைப்பது தாழ்வா? இன்பம் - சமைக்கின்றார் சமையல் செய்வார்!

அ) இன்பம் சமைப்பவர் யார்? ஆ) பாவேந்தர் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?

19. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

20. முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

21. இராவண காவியத்தில் இடம்பெற்றுள்ள இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

22. இணைத்து எழுதிப் பாருங்கள்.

| | | |
|---|---|---|
| அவன் | தான் | மனிதன் |
| | உம் | |
| | ஏ | |
| இயற்கை | ஆ | அழகு |

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 2 x 5 = 10

23. அ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக. *(அல்லது)*

ஆ) கடிதம் எழுதுக.

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் -ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

24. பத்தியில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக:

பெண்ணடிமை போகவேண்டும்; பெண், கல்வி பெறவேண்டும். பெண்கள் படித்தால்தான் தம் சொந்தக்காலில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு.

V. விரிவான விடையளிக்க. 1 x 8 = 8

25. அ) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

*(அல்லது)*

ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் ''செய்தி'' கதையின் மூலமாக விளக்குக.



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com